# யுத்தத்திற்கு பின்னரான சூழலில் இலங்கையின் வட மாகாண பாடசாலை மாணவர்க்குரிய பொதுப்பரீட்சைகளின் பெறுபேறுகளிலான தளம்பல்கள் : அவற்றுக்கான காரணங்கள் மற்றும் தீர்வுகள்

ஆ. நித்திலவர்ணன்

**ஆய்வுச்சுருக்கம்**

*இலங்கையில் தேசிய பொதுப்பரீட்சைகளாக தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை, க.பொ.த சாதாரண தரப்பரீட்சை மற்றும் க.பொ.த உயர்தரப்பரீட்சை ஆகியவற்றின் வடமாகாண தற்போதைய பெறுபேறுகளை தேசிய மட்ட பெறுபேறுகளுடனும், ஏனைய மாகாணப்பெறுபேறுகளுடனும் ஒப்பிடும்போது வட மாகாணம் பின் தங்கிய நிலையில் உள்ளது. எனவே இந்நிலைமையை ஆய்வுசெய்து மேம்படுத்தவேண்டிய தேவை கல்விச் சமூகத்தினர் மற்றும் ஆய்வாளர்கள் மத்தியில் எழுகின்றது, இவ்வாய்வானது அண்மைக்கால வடமாகாண பொதுப் பரீட்சைப் பெறுபேறுகளின் போக்கினை இனங்காண்பதுடன், குறைநிலைக்கு பொறுப்பான காரணங்களை இனங்காணவும் மற்றும் மேம்படுத்துவதற்கான எதிர்கால சிந்தனை, திட்டம் மற்றும் செயல்கள் பற்றியும் கவனம் செலுத்துகின்றது.*

**திறவுச்சொற்கள் :** யுத்தத்திற்குப் பின்னரான சூழல், வடமாகாணப் பாடசாலை மாணவர்கள், பொதுப்பரீட்சைப் பெறுபெறுகள்

## 1.0 ஆய்வுப்பின்னணி

யுத்தத்திற்கு பின்னரான சூழலில் வடமாகாண பாடசாலை மாணவர்களின் பொதுப்பரீட்சைகளாக தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை, க.பொ.த சாதாரண தரப்பரீட்சை மற்றும் க.பொ.த உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளில் தளம்பல் நிலை அல்லது வீழ்ச்சிநிலை காணப்படுகின்றது. அண்மைக்கால வடமாகாணத்தின் பொதுப் பரீட்சை பெறுபேறுகளை தேசிய மட்ட பெறுபேறுகளுடனும், ஏனைய மாகாணப் பெறுபேறுகளுடனும் ஒப்பிடும் போது வடமாகாணம் பின்தங்கிய நிலையில் உள்ளதனை அவதானிக்கலாம். மாவட்ட ரீதியாகவும் மற்றும் கல்விவலய ரீதியாகவும் நோக்குகின்ற போதும் வடமாகாணத்திலுள்ள மாவட்டங்கள் மற்றும் கல்வி வலயங்கள் பின் தங்கி இருப்பதனை அவதானிக்கலாம்.

## 2.0 ஆய்வுக்கான நியாயப்பாடு

இலங்கையின் மொத்ததேசிய உற்பத்திக்கு, வடமாகாணம் அதிகளவில் (67%) பங்களிப்புச் செய்யும் துறையாக சேவைத்துறை (service sector) காணப்படுகின்றது. இதற்கு காரணம் வடமாகாண மக்களின் அதிகரித்த கல்வியறிவு மட்டமாகும். துரதிஷ்ட வசமாக அண்மைக்காலமாக (2011- 2015) வடமாகாணத்தின் பொதுக்கல்வி அடைவு திருப்திகரமானநிலையில் அமையப் பெறவில்லை. இது நீண்ட நாளைய நோக்கில் பெரும்பாதிப்புக்களை ஏற்படுத்தக்கூடியது.

கடுமையான யுத்தம் நடைபெற்ற காலப்பகுதியில்கூட உயர்ந்த நிலையில்காணப் பட்ட வடமாகாணத்தின் பொதுக்கல்வி அடைவுகள் என்றுமில்லாதவாறு வீழ்ச்சி நிலையில் உள்ளமை தொடர்பான கவலையை கல்விச் சமூகத்தினர், கல்விசார் தொழிற் சங்கங்கள், அரசியல்வாதிகள், ஊடகங்கள், அரச சார்ப்பற்ற நிறுவனங்கள் மற்றும் பொதுமக்கள் வெளியிட்டு வருகின்றனர்.

"ஆறுதல்" என்ற தன்னார்வத்தொண்டு நிறுவனம் இலங்கையின் வடக்கு, கிழக்கு மற்றும் மலையகம்போன்ற பிரதேசங்களில்

பொதுக்கல்வி அடைவுவீழ்ச்சிக்கான காரணங்களைக் கண்டறியும் நோக்குடன் ஆய்வுக்கட்டுரைப் போட்டியொன்றை அண்மையில் பத்திரிகைகள்வாயிலாக அறிவித்திருந்தது.

அதேபோன்று அகில இலங்கை இந்து மாமன்றமும் தமிழர் பிரதேசங்களில், பொதுக்கல்வியில் எதிர்நோக்கப்படும் சமகால சவால்கள் தொடர்பான கலந்துரையாடல்களை ஆரம்பித்துள்ளது.

இத்தகைய பின்னணியில் பொதுப் பரீட்சைப் பெறுபேறுகளில் தளம்பல்நிலை அல்லது வீழ்ச்சி நிலை ஏற்படுவதற்கான காரணங்களை கண்டறிந்து, பெறுபேறுகளை மேம்படுத்துவதற்கான தீர்வுகளை முன் வைக்க வேண்டிய தேவைப்பாடு வடமாகாண கல்விச் சமூகத்தினர் மற்றும் பொதுமக்கள் மத்தியில் எழுகின்றது.

### 3.0 ஆய்வு நோக்கங்கள்

இவ் வாய்வானது பின்வரும் ஆய்வு நோக்கங்களைக்கொண்டது.

1. யுத்தத்திற்கு பின்னரான சூழலில் வட மாகாண பாடசாலை மாணவர்களின் பொதுப்பரீட்சைகளான
   - தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை,
   - க.பொ.த சாதாரண தரப்பரீட்சை மற்றும்
   - க.பொ.த உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளின் போக்கினை இனங்காணல்.
2. அண்மைய ஆண்டுகளில் (2011-2015) பொதுப் பரீட்சைப்பெறுபேறுகளில் தளம்பல்நிலை அல்லது வீழ்ச்சி நிலை ஏற்படுவதற்கானகாரணங்களைகண்டறிதல்
3. பெறுபேறுகளை மேம்படுத்துவதற்கு இதுவரை மேற்கொண்ட நடவடிக்கைகளை மதிப்பீடு செய்தல்.
4. வடமாகாண பாடசாலை மாணவர்களின் பொதுப் பரீட்சைப் பெறுபேறுகளை மேம்படுத்துவதற்கான தீர்வுகளை முன்வைத்தல்

### 4.0 ஆய்வு முறையியல்

அளவறிரீதியான (Quantitative) மற்றும் பண்பறிரீதியான (Qualitative) ஆய்வு முறையியல்கள் இரண்டும் கலந்து இவ்வாய்வு முன்னெடுக்கப்பட்டுள்ளது. இரண்டாம் நிலைத்தரவுகள், இலங்கைப் பரீட்சைத்திணைக்களப் புள்ளிவிபரங்கள் மற்றும் வடமாகாண கல்வி முகாமைத்துவ தரவுத்தொகுதியின் (Education Management Information System - EMIS) புள்ளிவிபரங்களில் இருந்தும் மற்றும் இலக்கியமீளாய்வுகளில் இருந்தும் பெறப்பட்டது. முதனிலைத் தரவுகள், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்வியலாளர்கள் மற்றும் பெற்றோர்களுடனான கலந்துரையாடல், வகுப்பறைத் தரிசிப்பு என்பனவற்றின் மூலம் பெறப்பட்டன.

### 5.0 இலக்கிய மீளாய்வு

- 2014 ஆம் ஆண்டு வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சினால் "வடக்கின் கல்வி முறைமை மீளாய்வு" (Northern Education System Review - NESR என்ற ஆய்வு மேற்கொள்ளப்பட்டு ஆய்வறிக்கை வெளியிடப்பட்டது. அதிலிருந்து இவ்வாய்வுடன்தொடர்புபட்ட விடயங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டன.
- கொழும்பு பல்கலைக்கழகத்தின் தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் மதிப்பீட்டு நிலையத்தினால் (National Education Research and Evaluation Centre - NEREC) தரம் - 8 மாணவர்களிடையே 2012 ஆம் ஆண்டு தேசிய ரீதியில் நடாத்தப்பட்ட மதிப்பீடுகளின் பகுப்பாய்வு அறிக்கையில் இருந்தும் பெறப்பட்டது.

**6.0 தரவு அளிக்கையும் தரவுப்பகுப்பாய்வும்**

**6.1 தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகளின் போக்குகள்**

- தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில், கடந்த மூன்றாண்டுகளில் (2013 - 2015)


அட்டவணை - 1 கடந்த ஐந்தாண்டுகளில் (2011 - 2015) மாகாண ரீதியாக வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்றுக் கொண்ட மாணவர்கள் சதவீதம்

| மாகாணம் | கடந்த ஐந்தாண்டுகளில் வெட்டுப்புள்ளிக்கு மேல்பெற்றுக் கொண்ட மாணவர் சதவீதம் | | | | |
|---|---|---|---|---|---|
| | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 |
| மேல் மாகாணம் | 10.89 | 11.21 | 9.97 | 10.18 | 9.86 |
| மத்திய மாகாணம் | 7.34 | 7.75 | 6.82 | 6.91 | 6.59 |
| தென் மாகாணம் | 11.03 | 11.76 | 11.67 | 11.36 | 10.42 |
| வட மாகாணம் | 9.62 | 9.46 | 11.02 | 11.00 | 11.38 |
| கிழக்கு மாகாணம் | 10.32 | 10.41 | 9.66 | 8.52 | 7.99 |
| வடமேல் மாகாணம் | 11.62 | 12.15 | 11.30 | 11.37 | 10.51 |
| வடமத்திய மாகாணம் | 10.24 | 11.05 | 10.18 | 9.72 | 9.69 |
| ஊவா மாகாணம் | 10.30 | 10.54 | 10.05 | 9.14 | 9.72 |
| சப்பிரகமுவா மாகாணம் | 11.57 | 11.81 | 11.55 | 11.84 | 10.64 |
| இலங்கை | 10.38 | 10.76 | 10.12 | 9.99 | 9.55 |

(மூலம்: இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் - 2015)

வரைபு - 1

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை 2011 - 2015 வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்றுக்கொண்ட மாணவர்களின் சதவீதத்தின் மாகாண ரீதியான ஒப்பீடு



வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்றுக் கொண்ட மாணவர் சதவீதமானது, ஏனைய மாகாணங்கயுடன் ஒப்பிடுகையில் வடமாகாணப்பெறுபேறுகள் திருப்தி கரமான நிரையிலுள்ளன.

- 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில், 70 புள்ளிகளுக்கு மேல் பெற்றுக்கொண்ட (அதாவது இரண்டு வினாத்தாளிலும் 35 புள்ளிகளுக்கு மேல்) மாணவர் எண்ணிக்கையின் அடிப்படையில் மாகாணங்களை வரிசைப்படுத்துகின்ற போது வடமாகாணம் 8 ஆம் வரிசை நிலை யில் உள்ளது.
- வடமாகாணத்திலுள்ள மாவட்டங்கள் தேசிய ரீதியாக பெறும் வரிசைநிலையும் பின்தங்கியதாகவே காணப்படுகின்றது (அட்டவணை: -2)
- 2015 ஆம் ஆண்டு நடைபெற்ற புலமைப் பரிசில் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில், தேசியரீதியாக 107 பாடசாலைகள் உயர்சித்தி வீதம் கொண்ட பாடசாலைகளாக அறிவிக்கப்பட்டுள்ளது. இப்பட்டியலில் வடமாகாணத்தைச் சேர்ந்த 08 பாடசாலைகள் மாத்திரமே இடம் பெற்றிருந்தன. (அட்டவணை - 3)

அட்டவணை: -2: 2014 - 2015 வரையிலானதரம் - 5 புலமைப்பரிசில்பரீட்சைபெறுபேறுகளின் அடிப்படையில், 70 புள்ளிகளுக்கு மேல் பெற்றுக்கொண்ட (ஒவ்வொரு வினாத்தாளிலும் 35 புள்ளிகளுக்கு மேல்) வடமாகாணத்திலுள்ள மாவட்டங்கள் தேசியரீதியாக பெறும் வரிசை நிலை

| வட மாகாணத்திலுள்ள மாவட்டங்கள் | வடமாகாணத்திலுள்ள மாவட்டங்கள் தேசிய ரீதியாக பெறும் வரிசை நிலை | |
|---|---|---|
| | 2014ஆம் ஆண்டு | 2015ஆம் ஆண்டு |
| யாழ்ப்பாணம் | 18 | 17 |
| வவுனியா | 19 | 18 |
| மன்னார் | 21 | 20 |
| முல்லைத்தீவு | 23 | 22 |
| கிளிநொச்சி | 24 | 23 |

(மூலம்: இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் - 2015)

அட்டவணை 3 : 2015 ஆம் ஆண்டு நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில், தேசிய ரீதியாக உயர்சித்தி வீதம் கொண்ட வடமாகாணப் பாடசாலைகள்

| தேசியரீதியான வரிசை நிலை | தேசியரீதியாக உயர்சித்தி வீதம் கொண்ட வடமாகாணப் பாடசாலைகள் | கல்வி வலயம் |
|---|---|---|
| 6 | யா / சென்.யோண் பொஸ்கோ | யாழ்ப்பாணம் |
| 11 | யா / யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப்பாடசாலை | யாழ்ப்பாணம் |
| 11 | யா / வடமராட்சி இந்து ஆரம்பப்பாடசாலை | வடமராட்சி |
| 11 | வ / இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம் | வவுனியா தெற்கு |
| 35 | யா / கொக்குவில் இந்து ஆரம்பப்பாடசாலை | யாழ்ப்பாணம் |
| 35 | வ / புதுக்குளம் ஆரம்பப்பாடசாலை | வவுனியா வடக்கு |
| 54 | யா / நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலை | வடமராட்சி |
| 54 | யா / துன்னாலை காசிநாதர் வித்தியாலயம் | வடமராட்சி |


(மூலம்: இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் - 2015)


### 6.2 க.பொ.த சாதாரண தரப்பரீட்சை பெறுபேறுகளின் போக்குகள்

அட்டவணை - 4: கடந்த ஏழாண்டுகளில் நடைபெற்ற க.பொ.த உயர்தரம் கற்பதற்கு தகைமை பெற்ற மாணவர் சதவீதம்

| மாகாணம் | கடந்த ஏழாண்டுகளில் நடைபெற்ற க.பொ.த சாதாரண தரப் பெறுபேறுகளின் அடிப்படையில் க.பொ.த. உயர்தரம் கற்க தகைமை பெற்ற மாணவர் சதவீதம் | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 |
| மேல் மாகாணம் | 60.93 | 67.30 | 66.56 | 69.03 | 69.4 | 71.96 | 72.67 |
| மத்திய மாகாணம் | 48.46 | 56.51 | 57.59 | 61.49 | 63.5 | 65.96 | 66.98 |
| தென் மாகாணம் | 53.08 | 60.33 | 62.86 | 66.30 | 67.05 | 73.08 | 75.21 |
| வட மாகாணம் | 55.71 | 56.93 | 54.26 | 59.99 | 65.33 | 64.19 | 60.38 |
| கிழக்கு மாகாணம் | 47.46 | 59.41 | 56.38 | 62.20 | 65.43 | 66.71 | 63.54 |
| வடமேல் மாகாணம் | 53.51 | 62.72 | 62.68 | 66.81 | 68.92 | 70.42 | 69.66 |
| வடமத்திய மாகாணம் | 42.54 | 54.80 | 56.09 | 60.40 | 63.06 | 65.25 | 66.61 |
| ஊவா மாகாணம் | 43.80 | 52.57 | 54.45 | 59.63 | 63.43 | 64.82 | 65.85 |
| சப்பிரகமுவா மாகாணம் | 50.33 | 59.40 | 60.44 | 64.3 | 66.60 | 68.26 | 69.97 |
| இலங்கை | 52.51 | 60.57 | 60.80 | 64.74 | 66.67 | 69.02 | |

(மூலம்: இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் - 2015)


க.பொ.த (சாதாரண தரப்) பரீட்சை - 2009 - 2015
80
70
60
50
40
30
20
10
0
2009
2010
2011
2012
2013
2014
2015
Southern
Western
Eastern
Northern,


Performance of School Candidates (1st Attempt) by Province
80.00
75.00
70.00
65.00
60.00
55.00
50.00
Western
Central
Southern
Northern
Eastern
North Western
North Central
Uva
Sabaragamuwa
2010
2011
2012
2013
2014
2015

அட்டவணை 5 : 2013 - 2015 வரையிலான க.பொ.த சாதாரண தரப்பரீட்சையில், க.பொ.த (உயர்தரம்) கற்க தகைமைபெறுதலின் அடிப்படையில், வடமாகாணத்திலுள்ள மாவட்டங்கள் பெறும் வரிசை நிலை

| வட மாகாணத்திலுள்ள மாவட்டங்கள் | கடந்த மூன்றாண்டுகளில் தேசியரீதியாக பெறும் வரிசைநிலை | | |
|---|---|---|---|
| | 2013 | 2014 | 2015 |
| மன்னார் | 4 | 2 | 10 |
| வவுனியா | 3 | 7 | 16 |
| யாழ்ப்பாணம் | 8 | 20 | 21 |
| முல்லைத்தீவு | 24 | 24 | 24 |
| கிளிநொச்சி | 25 | 25 | 25 |
| வடமாகாணம் | 6 | 9 | 9 |

(மூலம்: இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் - 2015)

- 2013- 2015 வரையிலான க.பொ.த சாதாரண தரப்பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில், க.பொ.த (உயர்தரம்) கற்க தகைமைபெறுவோரில் வட மாகாணம் மிகவும் பின்தாங்கிய நிலையிலுள்ளது. (அட்டவணை - 5)
- 2013- 2015 வரையிலான க.பொ.த சாதாரண தரப்பரீட்சை பெறு பேறு களின் அடிப்படையில், க.பொ.த (உயர்தரம்) கற்க தகைமை பெறு வோரில்வடமாகாணத்திலுள்ள மாவட்டங்கள் பெறும் வரிசைநிலையும் பின்தங்கியதாகவே காணப்படுகின்றது. (அட்டவணை - 5)
- 2015 ஆம் ஆண்டு க.பொ.த சாதாரண தரப்பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில், தேசியரீதியில் முதல் ஒன்பது இடங்களுக்குள் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் எந்தவொரு மாவட்டமும் இடம்பெறவில்லை.

**6.3 2015 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த உயர்தரப்பரீட்சை பெறுபேறுகளின் போக்கு**

- 2015 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த உயர்தரப் பரீட்சையில் பாடசாலைப் பரீட்சார்த்திகளின் பெறு பேறுகளின் அடிப்படையில், ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடும் போது வடமாகாணம் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது.
- பரீட்சைக்கு தோற்றிய அனைத்துப் பரீட்சார்த்திகளின் பெறுபேறுகளின் அடிப்படையில், ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடும்போது வடமாகாணம் மூன்றாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது.
- பாடத்துறை ரீதியாகவும் வடமாகாணம் முன்னணியிலுள்ளது. (அட்டவணை - 6)

**7.0 பொதுப் பரீட்சைகளின் பெறுபேறுகளில் தளம்பல் நிலை அல்லது வீழ்ச்சி நிலைக்கான காரணங்கள்**

1. நீண்ட கால யுத்தம் ஏற்படுத்திய பாதிப்புக்களும் யுத்தத்திற்கு பின்னரான சூழல் ஏற்படுத்திய பாதிப்புக்களும்
2. வடமாகாண முன்பள்ளிக் கல்வி வழங்கலில் காணப்படும் குறைபாடுகள்
3. மாணவர்கள் தொடர்பான காரணிகள்
4. ஆசிரியர்கள் தொடர்பான காரணிகள்
5. பாடசாலை தொடர்பான காரணிகள்
6. கல்வி நிர்வாகம் தொடர்பான காரணிகள்
7. குடும்பம் தொடர்பான காரணிகள்
8. சமூகம் தொடர்பான காரணிகள்
9. அரசியல் மற்றும் திட்டமிட்ட புறக்கணிப்பு

அட்டவணை 6 : பாடசாலைப் பரீட்சார்த்திகளின் பெறுபேறுகளின் அடிப்படையிலும், பரீட்சைக்கு தோற்றிய அனைத்துப் பரீட்சாத்திகளின் பெறுபேறுகளின் அடிப்படையிலும் வடமாகாணம் பெற்றுக் கொள்ளும் வரிசை நிலை

| பாடத்துறை | பாடசாலைப் பரீட்சார்த்தி களின் பெறுபேறுகளின் அடிப் படையில் வட மாகாணம் பெற்றுக்கொள்ளும் வரிசை நிலை | பரீட்சைக்கு தோற்றிய அனைத்துப் பரீட்சார்த்திகளின் பெறுபேறு களின் அடிப்படையில் வட மாகாணம் பெற்றுக்கொள்ளும் வரிசை நிலை |
|---|---|---|
| உயிரியல் விஞ்ஞானம் | 2 | 2 |
| பௌதிக விஞ்ஞானம் | 1 | 2 |
| வர்த்தகம் | 4 | 5 |
| கலை | 3 | 4 |
| பொறியியல் தொழில்நுட்பம் | 1 | 1 |
| உயிர் முறைமைகள் தொழில்நுட்பம் | 5 | 5 |
| ஏனையவை | 2 | 6 |

(மூலம்: இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் - 2015)

- 2015 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த உயர்தரப் பரீட்சை பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில், விஞ்ஞான பாடங்களில் தேசியரீதியாக 53 பாடசாலைகள் உயர்சித்திவீதம் கொண்ட பாடசாலைகளாக அறிவிக்கப்பட்டுள்ளது. இப்பட்டியலில் வடமாகாணத்தைச் சேர்ந்த 09 பாடசாலைகள் இடம்பெற்றிருந்தன. (அட்டவணை - 7)

அட்டவணை 7 : 2015 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த உயர்தரப் பரீட்சை பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில், விஞ்ஞான பாடங்களில் தேசியரீதியாக உயர்சித்திவீதம் கொண்ட வடமாகாணப் பாடசாலைகள்

| தேசிய ரீதியான வரிசை நிலை | 2015 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த உயர்தரப்பரீட்சை பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில், விஞ்ஞான பாடங்களில் தேசியரீதியாக உயர்சித்திவீதம் கொண்ட வடமாகாணப் பாடசாலைகள் | கல்வி வலயம் |
|---|---|---|
| 3 | யா / சென்.யோன்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம் | யாழ்ப்பாணம் |
| 3 | யா / நெல்லியடி மத்திய கல்லூரி | வடமராட்சி |
| 6 | யா / காட்லிக் கல்லூரி, பருத்தித்துறை | வடமராட்சி |
| 9 | யா / மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, பருத்தித்துறை | வடமராட்சி |
| 14 | யா / யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி | யாழ்ப்பாணம் |
| 19 | யா / வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை | யாழ்ப்பாணம் |
| 26 | யா / சுண்டுக்குளி மகளிர் கல்லூரி | யாழ்ப்பாணம் |
| 45 | யா / உடுப்பிட்டி அமெரிக்கன்மிசன் கல்லூரி | வடமராட்சி |
| 46 | யா / வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி | வடமராட்சி |

(மூலம்: இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் - 2015)

* *2015 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த உயர்தரப் பரீட்சை பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் விஞ்ஞானம் அல்லாத (Non Science Subjects) பாடங்களில் தேசியரீதியாக 55 பாடசாலைகள் உயர்சித்திவீதம் கொண்ட பாடசாலைகளாக அறிவிக்கப்பட்டுள்ளது. இப்பட்டியலில் வடமாகாணத்தைச் சேர்ந்த 03 பாடசாலைகள் மாத்திரமே இடம் பெற்றிருந்தன. (அட்டவணை 8)*

அட்டவணை - 8: 2015 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில், விஞ்ஞானம் அல்லாத (Non Science Subjects) பாடங்களில் தேசியரீதியாக உயர்சித்திவீதம் கொண்ட வடமாகாணப் பாடசாலைகள்.

| தேசிய ரீதியான வரிசை நிலை | 2015 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த உயர்தரப்பரீட்சை பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில், விஞ்ஞானம் அல்லாத (Non Science Subjects) பாடங்களில் தேசியரீதியாக உயர்சித்தி வீதம் கொண்ட வடமாகாணப் பாடசாலைகள் | கல்வி வலயம் |
|---|---|---|
| 39 | யா / சுண்டுக்குளி மகளிர் கல்லூரி | யாழ்ப்பாணம் |
| 3 | யா / சென்.யேம்ஸ் மகளிர் பாடசாலை, யாழ்ப்பாணம் | யாழ்ப்பாணம் |
| 6 | யா / வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை | யாழ்ப்பாணம் |

(மூலம்: இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் - 2015)

**7.1 நீண்டகால யுத்தம் ஏற்படுத்திய பாதிப்புக்களும் யுத்தத்திற்கு பின்னரான சூழல் ஏற்படுத்திவரும் பாதிப்புக்களும்**

நீண்ட கால யுத்தம் ஏற்படுத்திய பாதிப்புக்கள் மற்றும் யுத்தத்திற்கு பின்னரான சூழல் ஏற்படுத்திவரும் பாதிப்புக்கள் என்பன பாடசாலைக் கல்வியில் நேரடித் தாக்கங்களை விளைவித்துள்ளது. கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளை பாதிப்படையச் செய்துள்ளது. மாணவரின் கல்வி அடைவுகளில் பெருஞ்செல்வாக்கினை செலுத்தியுள்ளது.

* இலங்கையில் நடைபெற்ற உள்நாட்டு யுத்தத்தின் இறுதிக்கட்டக் காலப்பகுதியில் (2008 - 2009) நிவாரணக்கிராமங்களில் இருந்த 85,000 மாணவர்களில் யுனிசெவ் மேற்கொண்ட ஆய்வில் 70,000 மாணவர்கள் 1.5 தொடக்கம் 3 வருடங்கள் வரையில் தமது கற்றல் செயற்பாடுகளை முற்றாக இழந்திருக்கின்றார்கள் (குருகுலராஜா, 2014)
* பிற்காலப் பகுதியில் அவர்களுக்கான துரித கற்றல் நிதழ்ச்சித்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்ட போதும் அவர்கள் அடிப்படை மொழித்திறன் மற்றும் கணித த்திறன் அறிவு குறைந்தவர்களாக காணப்படுகின்றனர்.
* உள்நாட்டு யுத்தம் காரணமாக இலங்கையின் வடக்கு மாகாணத்தில் ஏற்கனவே காணப்பட்ட மக்களின் பொருளாதார மூலங்கள் அழிக்கப்பட்டுவிட்டன. உயிரிழப்புக்கள், உடமை இழப்புக்கள் மற்றும் அங்கவீனங்கள் காரணமாக குடும்பங்களின் வருமானம் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது. குடும்பத் தலைவர்கள் காணாமல்போனமை அல்லது நீண்டகாலமாக சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை போன்ற காரணங்களால், வடக்கில் பெண்களை தலைமைத்துவமாக கொண்ட குடும்பங்களின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுகின்றது. (நித்திலவர்ணன், 2014)
* யுத்தத்திற்கு பின்னர் மீள்கட்டமைப்புச் செயற்பாடுகள் (2009 - 2015) துரிதமாக முன்னெடுத்துச்செல்லப்படுகின்ற போதும், மக்களின் வாழ்க்கைத்தரம் பெருமளவில் மேம்படவில்லை. மாகாணத்தின் வறுமை, கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் குறைவடைந்து செல்கின்றபோதும், இன்னும் முற்றாக ஒழிக்கப்படவில்லை. நகரம், கிராமங்களிடையில் வறுமையின் பரம்பல் இன்றும் சமனற்றுக் காணப்படுகின்றது. (நித்திலவர்ணன், 2014) இலங்கை மத்திய வங்கி அறிக்கையின்

படி 2015 ஆம் ஆண்டில் வறுமை கூடிய மாவட்டமாக முல்லைத்தீவு மாவட்டம் பதிவாகியுள்ளது.

- யுத்தத்திற்கு முன்னர் வடக்கில் இயங்கி வந்த பாரிய மற்றும் நடுத்தர தொழிற் சாலைகள் மீள இயங்க ஆரம்பிக்க வில்லை. விவசாயத்திற்கேற்ற வளமான மண்ணைக் கொண்ட பிரதேசங்களில் மக்கள் விவசாயம் செய்ய இன்னும் அனுமதிக்கப்படவில்லை. இதனால் குடும்பங்களின் பொருளாதாரம் பாதிக்கப் பட்டுள்ளது. இந்நிலைமையானது மாணவர்களின் கல்வியிலும் அவர்களின் பரீட்சை அடைவுகளிலும் நேரடித் தாக்கத்தினைச் செலுத்துகின்றது
- யுத்தம் ஏற்படுத்திய பாதிப்புக்கள் காரண மாக விசேட தேவையுள்ள பிள்ளைகளின் எண்ணிக்கை, இலங்கையின் ஏனைய பிரதேசங்களைவிட வடக்கு மாகாணத்தில் அதிகமாக காணப்படுகின்றது.
(அட்டவணை 9)

**7.2 வட மாகாண முன்பள்ளிக்கல்வி வழங்கலில் காணப்படும் குறைபாடுகள்**

தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சையில், அதிக எண்ணிக்கையான வட மாகாண மாணவர்கள் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்றுக் கொள்ளவில்லை. இதற்கான பிரதான காரணம் வட மாகாண முன்பள்ளிக்கல்வி வழங்கலில் காணப்படும் குறைபாடுகளாகும்.

- வடமாகாணத்திலுள்ள பல முன்பள்ளி கள் அடிப்படை வசதிகளற்று இயங்கி வருகின்றன.
- வன்னிப் பிரதேசத்திலுள்ள பல முன் பள்ளிகள், சிவில் பாதுகாப்புப்படையி னரின் நிர்வாக த்தின் கீழ் இயங்கி வரு கின்றன.
- அடிப்படைக் கல்வித் தகைமை மற்றும் தொழில் தகைமை இல்லாத பலர் முன்பள்ளி ஆசிரியர்களாக கடமையாற்றிக் கொண்டிருக்கின்றார்கள்.
(அட்டவணை 10)

அட்டவணை : 09 - வடக்கு மாகாணத்தில் உள்ள விசேட தேவையுடைய மாணவர் எண்ணிக்கையும் அவர்களுக்கு கற்பிக்கும் ஆசிரியர் எண்ணிக்கையும்

| கல்வி வலயம் | விசேட தேவையுடைய மாணவர் எண்ணிக்கை | விசேட தேவையுடைய மாணவர்களுக்கு கற்பிக்கும் ஆசிரியர் எண்ணிக்கை |
|---|---|---|
| தீவகம் | 466 | 2 |
| யாழ்ப்பாணம் | 746 | 11 |
| கிளிநொச்சி | 842 | 12 |
| மடு | 278 | 8 |
| மன்னார் | 611 | 8 |
| முல்லைத்தீவு | 655 | 12 |
| தென்மராட்சி | 34 | 4 |
| துணுக்காய் | 298 | 10 |
| வடமராட்சி | 89 | 6 |
| வலிகாமம் | 1090 | 8 |
| வவுனியா வடக்கு | 204 | 5 |
| வவுனியா தெற்கு | 388 | 6 |
| வடமாகாணம் | 5701 | 92 |

(மூலம்: வடக்கின் கல்வி முறைமை மீளாய்வு - 2014)

**7.3 மாணவர்கள் தொடர்பான காரணிகள்**

- கொழும்பு பல்கலைக்கழகத்தின் தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் மதிப்பீட்டு நிலையத்தினால் (National Education Research and Evakuation Centre - NEREC) தரம் - 8 மாணவர்களிடையே 2012 ஆம் ஆண்டு தேசியரீதியில் நடாத்தப்பட்ட மதிப்பீடுகளின் பிரகாரம் வடமாகாணம் கணித பாடத்தில் 6 ஆம் நிலையையும், ஆங்கில பாடத்தில் 7 ஆம் நிலையையும், விஞ்ஞான பாடத்தில் 8 ஆம் நிலையையும் பெற்றிருந்தது. 2012 ஆம் ஆண்டு தரம் 8 இல் இருந்த மாணவர்களே 2015 ஆம் ஆண்டு க.பொ.த சாதாரணதரப் பரீட்சைக்கு தோற்றியுள்ளனர். இதில் வடமாகாணம் ஒன்பதாம் நிலையைப் பெற்றுள்ளது. இதிலிருந்து பெறுபேற்று வீழ்ச்சிக்கு, மாணவர்கள் சார்பான

அட்டவணை - 10: வடக்கு மாகாணத்திலுள்ள முன்பள்ளி ஆசிரியர்களின் கல்வித் தகைமையும் தொழில் தகைமையும்

| வலயம் | முன்பள்ளி ஆசிரியர் எண்ணிக்கை | கல்வித் தகைமை | | | தொழில் தகைமை | | |
|---|---|---|---|---|---|---|---|
| வலயம் | | A/L Pass | O/L Pass | Without O/L Pass | Aruthal | OUSL | Not Both |
| தீவகம் | 131 | 44 | 5 | 58 | 84 | 6 | 41 |
| யாழ்ப்பாணம் | 367 | 135 | 17 | 153 | 227 | 26 | 114 |
| கிளிநொச்சி | 450 | 72 | 32 | 198 | 392 | 6 | 52 |
| மடு | 85 | 35 | 3 | 40 | 78 | 0 | 7 |
| மன்னார் | 175 | 99 | 0 | 38 | 147 | 5 | 23 |
| முல்லைத்தீவு | 213 | 39 | 11 | 117 | 199 | 2 | 12 |
| தென்மராட்சி | 131 | 53 | 1 | 59 | 92 | 0 | 39 |
| துணுக்காய் | 156 | 28 | 11 | 115 | 144 | 6 | 6 |
| வரமராட்சி | 274 | 96 | 7 | 58 | 172 | 1 | 101 |
| வலிகாமம் | 362 | 158 | 15 | 85 | 273 | 6 | 83 |
| வவுனியா வடக்கு | 85 | 20 | 4 | 58 | 76 | 1 | 8 |
| வவுனியா தெற்கு | 251 | 82 | 27 | 99 | 187 | 6 | 58 |
| வடமாகாணம் | 2680 | 861 | 133 | 1078 | 2071 | 65 | 544 |

(மூலம்: இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் - 2015)

காரணிகள் அதிகளவில் செல்வாக்குச் செலுத்துவதை அவதானிக்கலாம்.

- அடிப்படை எழுத்தறிவு மற்றும் எண்ணறிவு அற்ற மாணவர்கள் வடமாகாணப் பாடசாலை வகுப்பறைகளில் கணிசமானளவில் காணப்படுகின்றனர்.
- மாறிவரும் புறச் சூழலில், மாணவர்களின் கற்றல் மீதான ஆர்வம் குறைவடைந்து செல்கின்றது.
- மாணவர்களின் பாடசாலை வரவு, குறிப்பாக மெல்லக்கற்கும் மாணவர்களின் வரவு குறைவாகக் காணப்படுகின்றது.
- தற்கால மாணவர்கள் மத்தியில் நவீன தொலைத் தொடர்பு சாதனங்களின் பாவனை அதிகரித்துக் காணப்படுகின்றது.
- மாணவர்கள் மத்தியில் ஒழுக்கமின்மை, குழுமோதல் மற்றும் துர்நடத்தைகள், என்பன அதிகரித்துச் செல்கின்றன.

- மாணவர்களின் பாடத் தெரிவுகளில் ஏற்படும் தவறுகள்

பாடத்தெரிவு எனப்படும் போது, அழகியல் பாடங்களின் தெரிவு, தொழில்நுட்பப் பாடங்களின் தெரிவு மற்றும் விருப்புக்குரிய பாடங்களின் தெரிவு என்பன இடைநிலை வகுப்புக்களில் முக்கியம் பெறுகின்றன. இப்பாடத்தெரிவுகளின்போது மாணவனின் விருப்பு, ஆற்றல், குடும்பப்பின்னணி என்பவற்றுக்கு அமைவாக வழிகாட்ட வேண்டும். துரதிஷ்டவசமாக சிலசமயங்களில் பாடசாலைக் கற்பித்தல் வள ஆளணி மற்றும் பௌதிகவள காரணிகள் மற்றும் அதிபர், ஆசிரியர்களின் விருப்பு வெறுப்புகளும் செல்வாக்கு செலுத்தி விடுகின்றன.

ஆரம்ப காலந்தொட்டு க.பொ.த உயர்தர பாடத்தெரிவுகளில் பிழையான தெரிவுகளும் இடம்பெற்று வருகின்றன. இதனால் பரீட்சையில் தோல்வி அடைந்த பின் பாடத்துறை மாறுவோரும் உண்டு. மூன்று தடவையும் ஒரே பாடத்துறையில் தோற்றி சித்தியடையத் தவறி க.பொ.த உயர்தர தகைமையின்றி அல்லற்படுவோரும் உண்டு. தற்காலத்தில் க.பொ.த (சா/த) சித்தியடைந்து உயர்தரம் நுழையும் மாணவர்களுக்குப் பாடத் தெரிவுகள் தொடர்பான வழிகாட்டல்கள் வழங்கப்படுகின்றன. இருந்தும் பிழையான தெரிவுகளும் இடம் பெற்று விடுகின்றன.

- மாணவர்களின் கற்றல் ஒழுங்கு, கற்றல், மாதிரி, கற்றல் உள்ளடக்கம் மற்றும் சுயகற்றல் திறன்கள் என்பன நடை முறையில், கவனத்தில் கொள்ளப்படுதல் குறைவாகவுள்ளது. இவை கவனத்தில் கொள்ளப்படுதல் அவசியம்.

### 7.4 ஆசிரியர்கள் தொடர்பான காரணிகள்

- அதிகஷ்ட மற்றும் கஷ்ட பிரதேசங்களிலுள்ள சில ஆரம்ப மற்றும் இடைநிலைப் பாடசாலைகளில் முறையாகப் பயிற்றப்படாத ஆசிரியர்கள் அதாவது ஏனைய பாட ஆசிரியர்கள், மற்றும் தொண்டர் ஆசிரியர்கள், ஆசிரிய உதவியாளர்கள் ஆகியோர் பிரதான பாடங்களைக் கற்பிக்கும் சூழல் காணப்படுகின்றது.
- கணிசமான எண்ணிக்கையான ஆசிரியர்களுக்கு நவீன கற்றல் - கற்பித்தல் முறைகள் பற்றிய பரீட்சயமின்மை காணப்படுவதுடன், அவை தொடர்பான பயிற்சி வாய்ப்புக்களும் குறைவாகக் காணப்படுகின்றது.
- காலத்திற்கேற்ப ஆசிரியர் கல்வி கலைத்திட்டங்கள் மாற்றியமைக்கப்படுவதில்லை. மற்றும் நவீன பயிற்சி முறைகள் என்பன ஆசிரியர் கல்வி நிறுவனங்களால் முறையாகப் பின்பற்றப்படுவதில்லை
- யாழ்ப்பாண மாவட்டத்தில் முதலிடத்தில் இருந்த கல்வி இன்று கீழ் நிலையில் இருப்பதற்கு ஆசிரியர்கள் வகுப்பறையில் இல்லாமையே காரணம் என தற்போதைய வடக்கு மாகாண ஆளுநர் சுட்டிக்காட்டியுள்ளார் (உதயன், 11-04-2016) இவர் முன்னர் ஆசிரியராகப் பணியாற்றியவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது

அவர் மேலும் குறிப்பிடும்போது உலகளாவிய ரீதியில் 30 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற விகிதத்தில் ஆசிரியர்கள் இருக்கின்றனர். ஆனால் இலங்கையில் 17 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் இருக்கின்றார் எனவும் இலங்கையில் ஆசிரியர்களுக்காக பெருந்தொகைப் பணம் செலவு செய்யப்படுகின்றது என்பதையும் சுட்டிக்காட்டியிருந்தார்.

கல்விநிலை பரிதாப நிலையில் இருப்பதற்கு, ஆசிரியர்கள் நீண்ட விடுமுறைகளை எடுப்பது மற்றும் வெளி நாடுகளுக்கு செல்கின்றமை காரணமென வும் அவர் குறிப்பிடுகின்றார்.

- தற்காலத்தில் ஆசிரியர்களில் சிலர், சம்பளத்திற்கு வேலை பார்க்கும் தொழிலாகத்தான் ஆசிரியத் தொழிலை கருதுகின்றனர்.

- பாடத்திட்டத்தில் சில ஆசிரியர்களுக்கு ஆர்வமற்ற, ஆளுமையற்ற சூழல், கற்பித்தல் முறையில் தெளிவின்மை, சில ஆசிரியர்கள் குறிப்பிட்ட மாணவர்களுக்கு சொல்லிக்கொடுத்து, மந்தமான மாணவர்களை மட்டம் தட்டுவது, தன்னிடம் ரியூசன் படிக்கும் மாணவர்களுக்கு மட்டும் நன்றாக சொல்லிக் கொடுப்பது, சீரற்ற பழக்கவழக்கங்களை மாணவர்கள் முன்பு செய்தல் போன்ற பொறுப்பற்ற நடவடிக்கைகளால் மாணவ சமுதாயம் ஒழுக்க நடவடிக்கைகளை மீறுபவர்களாக உள்ளனர்.

- சமீப காலமாக ஊடகங்கள் வாயிலாக பார்க்கும்போது, ஒரு சில ஆசிரியர்களின் நடவடிக்கைகள் மாணவ சமுதாயத்திலும், பெற்றோர்கள் மத்தயிலும் ஒருவித அச்ச உணர்வுகளை ஏற்படுத்துவதாகவும், ஆசிரியர்கள் மீதுள்ள நன்மதிப்பை குறைக்கும் விதமாகவும் உள்ளது. தற்கால சமூகம் தாழ்ந்து போனதற்கு ஆசிரியர் சமூகத்தில் ஏற்பட்ட தாழ்வும் ஒரு காரணம் என்பதை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

- ஆசிரியர் பாடவிடயங்களை கற்பிக்கும் அளவுக்கு, பரீட்சை மாதிரி வழிகாட்டல் மற்றும் கற்பதற்கு உரிய வழிகாட்டல் போன்றவற்றைச் செய்வது நடைமுறையில் குறைவாகவுள்ளது.

- மேலும் மாணவர்களின் சுயகற்றலுக்கு போதியளவு நேரம் வழங்குவதில்லை என்பதுடன், கணிசமானளவு ஆசிரியர்கள் பாடத்திட்டத்தை நிறைவு செய்வதில்லை. இவை மாணவர்களின் அடைவுக் குறைபாட்டில் பெருஞ் செல்வாக்குச் செலுத்துகின்றது.

### 7.5 பாடசாலை தொடர்பான காரணிகள்

- வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையில் மனிதவளம் மற்றும் பௌதிகவளப்பரம்பல் சமனற்றுக் காணப்படுகின்றது.
- மாகாணப் பாடசாலைகளுக்கும் தேசிய பாடசாலைகளுக்குமிடையில் ஏற்றத் தாழ்வுகள் காணப்படுகின்றது.
- சில பாடசாலைகள் சிறப்பான பௌதிக வளம் மற்றும் மனித வளங்களை கொண்டிருக்கும் அதேவேளை மாணவர் எண்ணிக்கை குறைவாகக் காணப்படுகின்றது. அயலிலுள்ள வேறு சில பாடசாலைகள் அளவுக்கதிகமாக மாணவர்களை உள்வாங்குகின்றன.
- சில பாடசாலை அதிபர்களின் வினைத் திறனற்ற நிர்வாகம் காரணமாகவும் கல்வி அடைவுகளில் வீழ்ச்சி ஏற்படுகின்றது.

### 7.6 கல்வி நிர்வாகம் தொடர்பான காரணிகள்

இலங்கை தமிழர் சங்கம் வெளியிட்ட பத்திரிகைச் செய்திக் குறிப்பில் (யாழ். தினக்குரல், 02 - 04-2016) பின்வரும் கல்வி நிர்வாகம் தொடர்பான காரணிகள் இன்றைய கல்வி நிலை வீழ்ச்சிக்கு காரணமாக அமைவதாகச் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

- முறையற்ற ஆசிரிய இடமாற்றங்கள்
- முறையற்ற அதிகாரிகளின் இடமாற்றங்கள்
- அரசியல் தலையீடுகள்
- கல்வியில் அநாவசியமான வெளியாரின் தலையீடுகள்
- அதிகாரிகள், அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களின் சுயமான சிந்தனைக்கு ஏற்படுத்தப்படும் முட்டுக்கட்டைகள்
- தேசிய மட்டத்தில் நடைபெறும் பரீட்சை வினாத்தாள்களுக்கு முரணான வகையில் சில பாடங்களின் வினாத்தாள்கள் வலய மட்டங்களிலும் மாகாண மட்டத்திலும் தயாரிக்கப்படுதல்.
- மாகாண மட்டத்தில் பெரும் தொகையான பணம் செலவிடப்பட்டு நடைபெறும் கல்விச் செயலமர்வு மற்றும் முன்னோடிக் கருத்தரங்குகள் வினைத்திறனற்றதாக இடம்பெறுதல் போன்றன.

### 7.7 குடும்பம் தொடர்பான காரணிகள்

- தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை வரை காட்டும் பெற்றோர் அக்கறை, இடை நிலைக்கல்வியில் தொடர்ந்து நீடிக்காமை.
- வீட்டில் பிள்ளை படிப்பதற்கான சூழலின்மை அதாவது கற்றலுக்கான பௌதிக வளங்களின் பற்றாக்குறை, கற்றலுக்கான கவிவநிலையின்மை மற்றும் குடும்ப அங்கத்தவர்களின் ஒத்துழைப்பின்மை என்பன மாணவர்களின் பெறுபேற்றுக் குறைபாட்டில் பெருஞ் செல்வாக்கினைச் செலுத்துன்றன.
- தென்னிந்திய சினிமா, தொலைக்காட்சி தொடர் நாடகங்கள் மற்றும் கிரிக்கெட் போட்டி ஒளிப்பரப்புக்களுக்கு குடும்ப அங்கத்தவர்கள் அடிமையாகிப் போகின்றமை காரணமாக மாணவர்களின் கற்றல் நேரங்கள், பொழுது போக்கிற்கான நேரங்களாக மாற்றமடைகின்றன அல்லது மாணவர்களின் கற்றலுக்கு இடையூறு விளைவிக்கின்றன.
- அதிகரித்துச் செல்லும் குடும்ப வன்முறைகளும் விவாகரத்துக்களும்
- பெற்றோர் மற்றும் குடும்ப அங்கத்தவர்களிடையே அதிகரித்துச் செல்லும் மதுப்பாவனை மற்றும் போதைப்பொருள் பாவனை காரணமான குடும்ப வன்முறைகள் அதிகரித்துச் செல்கின்றன. இவை மாணவர் கற்றலில் எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்துகின்றன.

### 7.8 சமூகம் தொடர்பான காரணிகள்

- தற்கால சமூகத்தில் கொலை, கொள்ளை மற்றும் குழுமோதல்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன. தென்னிந்திய சினிமா மற்றும் தொலைக்காட்சி தொடர் நாடகங்கள் இவற்றை ஊக்குவிக்கின்றன.
- பாலியல் துஷ்பிரயோகங்கள், சிறுவர் துஸ்பிரயோகங்கள் மற்றும் இளவயதுத் திருமணங்கள் தொடர்பான செய்திகள் அடிக்கடி ஊடகங்களில் வெளிவருகின்றன.
- இலங்கையின் போதைப் பொருள் இடமாற்று மையமாக யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் மாவட்டங்கள் விளங்குவது அனைவருக்கும் கவலைதரும் விடயமாகும்.
- பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் மத்திலும் தற்கொலை முயற்சிகள் அதிகரித்துச் செல்கின்றன.
- முகநூல் போன்ற சமூக வலைத்தளங்களின் தவறான பாவனை காரணமாக அவை சார்ந்த குற்றங்களும் அதிகரித்துக் காணப்படுகின்றன.
- சமூகம் கேளிக்கைகள் மற்றும் கொண்டாட்டங்களுக்கு காட்டும் அளவுக்கதிகமான அக்கறையை மாணவர்கள் கல்வி மற்றும் ஒழுக்க மேம்பாட்டில் காட்டுவது குறைவாகவுள்ளது.
- பாடசாலை நேரங்களில் பல கோயில்களில் ஒலிபெருக்கிகள் அளவுக்கதிகமான ஒலித்துக் கொண்டிருத்தல்.

மேற்குறிப்பிட்ட சமூகம்சார் காரணிகள், மாணவர்களின் கற்றலில் எதிர்மறையான தாக்கங்களை ஏற்படுத்துவதுடன், கற்றலுக்கத்தினையும் பாதிப் படையச் செய்வதன் மூலம் பரீட்சைப் பெறுபேற்று வீழ்ச்சிக்கு காரணமாக அமைகின்றன.

### 7.9 அரசியல் மற்றும் இனரீதியான புறக்கணிப்புக்கள்

- 2014 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை வழிகாட்டியில் தமிழ் மொழி புறக்கணிக்கப்பட்டது. எதிர்பார்க்கப்படும் வினாக்களின் தொகுப்பு தமிழ் மொழிப் பகுதிப் பில் இடம் பெற்றிருக்கவில்லை. (ஞாயிறு தினக்குரல், 04-18-2014)
- 2015 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த சாதாரண தரப்பரீட்சையில் தேசியரீதியாக சிங்கள மொழிமூலம் முதன்மைபெற்ற மாணவர் பெயர் விபரங்கள், பரீட்சைத்திணைக்களத்தால் அறிவிக்கப்பட்ட அதேவேளை, தமிழ் மொழிமூலம் முதன்மை பெற்ற மாணவர்கள் பெயர் விபரங்கள் அறிவிக்கப் பட்டவில்லை. (இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம், 2015)

- வடக்கு, கிழக்கு மாகாணங்கள் கல்வியில் திட்டமிட்டு அழிக்கப்படுகின்றன என்ற உண்மையை நாம் அனைவரும் உணர வேண்டும் என்பதோடு இன்னமும் வெளிப்படுத்த முடியாத அபாயகரமான நிலைமைகள் உள்ளன என்பதை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் அண்மையில் சுட்டிக்காட்டியிருந்தது. (யாழ். தினக்குரல் 02-04-2016)

### 8.0 வடமாகாண பாடசாலை மாணவர்களின் பொதுப் பரீட்சைப் பெறுபேறுகளை மேம்படுத்து வதற்கான தீர்வுகள்

- ஏற்கனவே மாணவர்களின் பரீட்சைப்பெறு பேறுகளை அதிகரிப்பதற்காக பல்வேறு நடவடிக்கைகள், மாகாணக் கல்வித் திணைக்களத்தினாலும், வலயக் கல்வி அலுவலகங்களினாலும் மற்றும் பாட சாலைகளினாலும் மேற்கொள்ளப் படுகின்றன. அதாவது பின்தங்கிய மாணவர்களுக்கான மேலதிக வகுப்புக்கள், பயிற்சிப்பரீட்சைகள் மற்றும் பரீட்சை வழிகாட்டல்கள் என்பன நடாத்தப் படுகின்றன.
- எதிர்காலத்தில் அடைய உத்தேசிக்கும் இலக்குகளை குறிப்பிட்டு உறுதிப்பாட்டு ஒப்பந்தங்கள், கல்வி அதிகாரிகள், அதிபர் கள் மற்றும் ஆசிரியர்களிடையில் கைச்சாத் திடப்படுகின்றன.
- தரவட்டங்கள் மற்றும் விசேட செயற்றி ட்டங்கள் என்பன நடை முறைப்படுத்தப் படுகின்றன

**இவற்றிற்கு மேலதிகமாக சில ஆய்வாளனின் முன்மொழிவுகள்**

ஆசிரியர்கள் தங்களுடைய ஆசிரியப் பணியை மிகவும் தியாக உணர்வுடனும், பொறுப்புணர்வுடனும், கடமை உணர்வு டனும் செய்ய வேண்டும்.

- சிறப்பான பணிபுரியும் ஆசிரிய சமூகத்திற்கு அனைவரும் மரியாதை செலுத்த வேண்டும். இன்றைக்கும் நேர்மையாக கல்விப்பணியைத் தொடரவிரும்பும் ஆசிரியர்களுக்கு அதற்கான வாய்ப்புக்கள் கிடைக்கவேண்டும்.
- ஆரம்பப் பாடசாலைகளின் அதிபர், ஆசிரியர்கள் தமக்குட்பட்ட முன்பள்ளி களுக்கு மாதத்தில் ஓரிரு நாட்கள் சென்று பிள்ளைகள் அடையவேண்டிய தேர்ச்சி களை அடைந்திருக்கின்றார்களா என பரிசீலிப்பதுடன் அவர்களுக்கு ஓரிரு மணித்தியாலங்கள் கற்பித்தல்.
- மாணவர் முன்னேற்றம் தொடர்பாக பெற்றோருக்கு கல்வி வழங்கலில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை மற்றும் நெல்லியடி மெதடிஸ்த மிசன் தமிழ்க்கலவன் பாடசாலை போன்ற சில பாடசாலைகள் வெற்றிக்கண்டுள்ளன. ஏனைய பாடசாலை களும் இவற்றைப் பின்பற்றவேண்டும்.
- இன்னமும் சில இடங்களில் பெயர், முகம் வெளிப்படாமல், தமது பணியை முடிந்தவரை சிறப்பாக செய்து வரும் ஆசிரியர்களை நாம் பாராட்ட வேண்டும்.
- பொருத்தமான கல்வி வழிகாட்டல் (Educational Guidance) வழங்கல்-
- பாடத் தெரிவுகள், நூலகப்பயன்பாடு மற்றும் கற்றல் பழக்கங்கள் போன்ற விடயங்களில் துறை தேர்ந்தவர்கள் வழி காட்டும் போது மாணவர்களின் பிரச்சி னைகள் தீர்க்கப்படுவதுடன் கல்வியின் மீதான நாட்டமும் அதிகரித்துச் செல்லும் இதன்மூலம் மாணவர்களது அடைவு மட்டமும் அதிகரித்துச் செல்லும்.
- இலங்கையின் பொதுக்கல்வியின் ஏழாவது கற்றல் தேர்ச்சியான, கற்றலுக்காக கற்றல் (Learn to learn) என்ற தேர்ச்சி எவ்வளவு தூரம் மாணவர்களிடம் அடையப்படுகின்றது என்ற வினா ஆய்வாளனிடம் உண்டு.

எவ்வாறு இலகுவாகக்கற்பது? கற்பித்தலின்பால் எவ்வாறு அதியுச்ச கவனத்தை செலுத்துவது? கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டின்போது சிறந்த புலக்காட்சியைப் பெற்றுக்கொள்ளும் வழிவகைகள் எவை? கற்பவற்றை எவ்வாறு ஞாபகப்படுத்திக் கொள்வது? நேரான கற்றல் இடமாற்றத்தை எவ்வாறு ஏற்படுத்திக் கொள்வது? மற்றும்

பரீட்சைகளில் விடை எழுதும் முறைகள் என்பவை தொடர்பாக வகுப்பறைகளில் அதிகளவில் பயிற்றுவிக்கப்படவேண்டும்.

- கல்வி அமைச்சு வெளியிட்ட சுற்றறிக்கை இலக்கம் 6/2013 இற்கு அமைவாக தற்போது பாடசாலைகளில் “பாடசாலை ஆலோசனை மற்றும் வழிகாட்டல் வேலைத்திட்டங்கள்”முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இவ்வேலைத்திட்டங்களில் மாணவர்களின் உளநலன் மேம்பாடு மட்டுமன்றி ஆசிரியர்களின் உளநலன் மேம்பாட்டுக்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட வேண்டும். இதன் மூலம் ஆசிரியர்களிடமிருந்தும் உச்ச அளவு வினைத்திறனைப் பெற்றுக்கொள்ள முடியும்.
- வலயமட்ட மாநாடுகள் மற்றும் கருத்தரங்கள் மூலம் வலயமட்ட கல்விப்பிரச்சினைகள்கலந்துரையாடப்பட வேண்டும். மாணவர் அனுமதி, வளப்பங்கீடு, ஆசிரியர் இடமாற்றங்கள் போன்ற விடயங்களில் அனைவரும் விட்டுக்கொடுப்புடன் செயற்பட வேண்டும்.
- மாகாணக் கல்வித்திணைக்களத்திலும், வலயக்கல்வி அலுவலகங்களிலும் வினா வங்கிகள்(Question Bank) உருவாக்கப்பட்டு, தேர்ச்சி மிக்க ஆசிரியர் குழாத்தினால் மாகாணமட்ட மற்றும்வலயமட்ட வினாத் தாள்கள் தயாரிக்கப்பட வேண்டும்.
- க.பொ.த உயர்தர தவணைப்பரீட்சை வினாத்தாள்கள் மாகாணக் கல்வித் திணைக்களத்தின் கண்காணிப்பில் இயங்கும் நிபுணத்துவமிக்க ஆசிரியர் குழாம் ஒன்றினால் தயாரிக்கப் பட வேண்டும்.
- கல்வி அதிகாரிகள், அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் கல்விசார் தொழிற்சங்கங்கள் தம்மிடையேயான முரண்பாடுகளை களைந்து, ஒன்றாக இணைந்து வட மாகாண கல்விசார் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும்
- மாணவர்களது கற்றலுக்கான நேரம், சூழல், வசதிகள், ஊக்கல் மற்றும் பரீட்சை மாதிரிப் பயிற்சிகள் என்பவற்றை மேம்படுத்த வேண்டும்.

**முடிவுரை**

இலங்கையில்நடைபெற்ற நீண்ட உள்நாட்டு யுத்தத்தில் அதிகளவில் பாதிப்பிற்குள்ளானது எமது வடக்கு மாகாணமாகும். இதனால் வடமாகாண பாரம்பரியச்சொத்தான கல்வியில் பல பின்னடைவுகளைச் சந்திக்க நேர்ந்துள்ளது. அண்மைக்கால பொதுப்பரீட்சை அடைவு வீழ்ச்சிகள் அதற்கு கட்டியம் கூறுவனவாக அமைந்துள்ளன. இந்த யதார்த்தநிலையை கல்விசார் சமூகத்தினர் மற்றும் பொதுமக்கள் அனைவரும் உணர்ந்துகொள்ள வேண்டும். ஒருவரையொருவர் குற்றம்சாட்டிக்கொண்டு காலத்தைப்போக்காது, வடமாகாண கல்வி மேம்பாட்டுக்கான நடவடிக்கைகளில் ஒற்றுமையாக ஈடுபட வேண்டும்.

**உசாத்துணைகள்**


1. தனபாலன், பா(2016) க.பொ.த (சாதாரண தரப்) பரீட்சைப் பெறுபேறுகளில் பிரதேச ரீதியான ஒப்பீடுகளில் ஏற்றத்தாழ்வுகள், உதயன், 11-04-2016, நியூ உதயன் பப்பிளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட்,யாழ்ப்பாணம்.
2. தனபாலன், பா(2016) தமிழ் அதிகாரிகளின் பற்றாக்குறையும் ஆசிரிய வளம் போதாமையும், உதயன், 12-14-2016, நியூ உதயன் பப்பிளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட், யாழ்ப்பாணம்.
3. வடக்கு மாகாண கல்வி அமைச்சு (2014) வடக்கின் கல்வி முறைமை மீளாய்வு, வடக்கின் கல்விமுறைமை மீளாய்வு நெறிப்படுத்தும் குழு, யாழ்ப்பாணம்.
4. நித்திலவர்ணன், ஆ(2014) வடமாகாணத்தின் பேண்தகு அபிவிருத்திக்கான சவால்களும், அவற்றை எதிர்கொள்வதற்கான கல்வி முறைகளைக் கண்டறிதலும், யா/கரவெட்டி விக்கேஸ்வராக் கல்லூரியின் ஸ்தாபகரான இராசவாசல் முதலியார் உயர்திரு வீரவாகு சிற்றம்பலம் நினைவுப்பேருரை, 27-19-2014.

5. ஞாயிறு தினக்குரல் 04-28-2014, '2014 ஆம்.ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை வழிகாட்டியில் தமிழ்மொழி புறக்கணிக்கப்பட்டுள்ளது" - செய்தி, ஏசியன் மீடியா பப்பிளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட், யாழ்ப்பாணம்.
6. யாழ். தினக்குரல், 02-04-2016) , "க.பொ.த சாதாரணதர பெறுபேற்றில் யாழ். மாவட்டம் 21 வது இடத்தில்" - செய்தி, ஏசியன் மீடியா பப்பிளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட், யாழ்ப்பாணம்
7. கோணேசப்பிள்ளை, கோ (2014), " ஆறாந்தர தமிழ் மொழியும் இலக்கியமும் புதிய பாடநூலில் காணப்படும் தவறுகள்", யாழ். தினக்குரல், 104,15-12-2014, ஏசியன் மீடியா பப்பிளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட், யாழ்ப்பாணம்
8. வடமாகாண கல்வி முகாமைத்துவ தரவுத்தொகுதி (Education Management Information System -EMIS), மாகாணக்கல்வித் திணைக்களம், வடமாகாணம் retrieved from http:// www.edudept.np.gov.lk on 19-04-2016.
9. Department of Examination (2015) performance of Candidates of G.C.E(A/L) Examination - 2015,Research and Development Branch, National Evaluation and Testing Service, Department of Examination, Sri Lanak.
10. Department of Examination (2014) Performance of Candidates of G.C.E (O/L) Examination - 2014, Research and Development Branch, National Evaluation and Testing Service, Department of Examinations, Sri Lanka.
11. Department of Examination (2015) Performance of Candidates of Grade Five Scholarship Examination - 2015, Resarch and Development Branch, National Evaluation and testing Service, Department of Examinations, Sri Lanka.
12. Gurukularajah. T (2014), " Vulnerability IN Northen Education', Discussion on 'Democratizing the North: A Dialogue on Governance, Development and Vulnerability', Jaffna, 10-01-2014.
13. National Education Research and Evaluation Centre - NEREC (2012), National Assessement of Achievement of Grade - 08 Students in Sri Lanka - 2012, University of Colombo, Sri Lanka.
14. Central Bank of Sri Lanka (2015) Provincial Gross Domesstic Product - 2014, Press release of Communications Department, Central Bank of Sri Lanka, Colombo - 01.